**மத்திய கலாசார நிதியம் - 2015**

மத்திய கலாசார நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றும் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(4) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய கலாசார நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொடர்புடைய நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய கலாசார நிதியத்தின் சில நிர்மாண வேலைகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றப்படுவதற்கான சேவையைப் பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண வேலைத் தனியார் கம்பனி நிறுவப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின்போது நிதியத்தின் செயற்திட்ட வேலைத்தளங்களில் அகழ்வு/ பாதுகாப்பு உதவியாளர்கள் பெறப்படுவதற்காக ரூபா 81 மில்லியன், நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்கென ரூபா 04 மில்லியன் என அக்கம்பனிக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், நிதியத்திற்கும் கம்பனிக்குமிடையே நிலவிய தொடர்பின் தன்மை மற்றும் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) நிதியத்தின் கீழ் இயங்கும் படலீய மாதிரிப் பாடசாலை நிர்மாண வேலைக்கான கேள்வி கலாசார பாதுகாப்பு நிர்மாண வேலைக் கம்பனி பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவருக்குச் சொந்தமான மற்றுமொரு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், அப் பணிப்பாளருக்கும் கம்பனிக்கும் இடையேயான தொடர்பு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) நிதியத்தின் பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளராகப் பணியாற்றும் பிறிதொரு தனியார் கம்பனிக்கு ரூபா 400,000 நிதியுதவி வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தனியார் கம்பனிக்கும் பணிப்பாளருக்குமிடையேயான தொடர்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2

ஆண்டின்போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 975 மில்லியன் மற்றும் பற்றுதல் செய்யப்பட்ட முதலீடாகிய ரூபா 50 மில்லியன் என்பன முறையே காசு வெளிச் செல்லுதல் மற்றும் காசு உட்புகுதலாகக் காசுப்பாய்ச்சல் கூற்றில் வெவ்வேறாகக் காட்டப்பட்டிராததுடன், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிச் செல்லல் ரூபா 46,761,998 அதிகரித்துக் காட்டப்பட்டுமிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3

(i) நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்திற்குச் சொந்தமல்லாத தொல்பொருள் ஆணையாளரின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாக உள்ள தொன்மை வாய்ந்த சொத்துக்களை மேம்படுத்துவதற்குச் செலவிடப்படும் மூலதனச் செலவினம் சம்பந்தமான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் செலவாகிய ரூபா 60,215,604 கட்டிடங்கள், வீதிகள், உட்கட்டமைப்பு வியூகத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ii) நிதியத்தின் 54 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குகளில் ஏற்படும் முன்னைய காலப்பகுதிக்குரிய வழுக்களுக்கான சீராக்கலுடன் தொடர்புடைய திருத்தங்கள் முன்னைய ஆண்டினது ஒப்பீட்டுத் தகவல்கள் மீண்டும் நிறுவனப்படுவனவாக மாற்றஞ் செய்யப்பட்டு குறிப்பு ஒன்றின் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுத் தகவல்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 74,633,782 சீராக்கலானது திரண்ட மிகையில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆயினும், அது தொடர்பான தகவல்கள் குறிப்பு ஒன்றின் மூலம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### (இ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7

(i) நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 4 மில்லியன் பெறுமதியான கட்டிடங்களைக் கட்டிடத் திணைக்களம் பயன்படுத்தியபோதும், அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ii) நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்படு காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படாமையால், ரூபா 191.4 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகிய நிலையிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 க்கமைய மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும், கைதவிர்ப்புச் செய்யப்படவுள்ள சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் புலப்படுத்தப்படவில்லை.

(iii) நியமத்தின் 87 ஆம் இலக்கப் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களது உரித்து தொடர்பாக நிலவும் தடைகள் மற்றும் வரம்புகள் என்பன நிதிக் கூற்றுக்களில் புலப்படுத்தப்பட வேண்டுமாயினும், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தலைமை அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தின் உரித்துக்குள்ள வரம்பு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் புலப்படுத்தப்படவில்லை.

- 2012 ஆம் ஆண்டில் ரூபா 4.2 மில்லியன் மதிப்பீட்டில் கணக்கிலிடப்பட்ட நிதியத்தின் சொத்தாகிய கண்டியில் உள்ள பிரிம்ரோஸ் காணியினது பயன்படு உரித்து நிதியத்திடம் இல்லாதிருந்தும் அது தொடர்பாக நிலவும் தடைகளும் வரம்புகளும் புலப்படுத்தப்படவில்லை.

- நிறுவனத்தின் கதிர்காமத்தில் உள்ள சுற்றுலா பங்களா நிர்மாண வேலை தொடர்பாக நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபைக்குரிய 40.25 பர்ச்சஸ் காணியை மத்திய கலாசார நிதியம் 50 ஆண்டுகளுக்குத் தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்துவதற்கான உரித்திருந்தபோதும், அக்காணி தொடர்பான நிறுவனத்தின் தனிப்பட்ட ரீதியிலான உரித்து நிதிக் கூற்றுக்களில் புலப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சந்தேகத்துக்குரிய கடன்களுக்கான நிதி ஏற்பாடு தொடர்பாக நிதியம் கடைப்பிடிக்கும் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. 5 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதுள்ள கடன்பட்டோர் மீதிகள் இருந்தபோதும், கடனை அறவிடுவதற்கான வாய்ப்பு தொடர்பாக மீளாய்வு செய்யாது முன்னைய இரு ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் ரூபா 1,964,833 சந்தேகத்துக்குரிய கடனுக்கான நிதி ஏற்பாடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டு மூலதன மானியக் கணக்கீடு தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டு அதற்கமைய கணக்கீடு செய்யப்படாமையால், மூலதன மானியமாகிய ரூபா 286,249,552 மூலதனம் மற்றும் ஒதுக்கத்தின் கீழும் ரூபா 13,174,223 மூலதன மானியம் நடைமுறை அல்லாத பொறுப்பின் கீழும் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீகிரிய செயற்திட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைக் சங்கத்தால் நடாத்தப்படும் முதல் சிகிச்சை முகாம் தொடர்பாக அச் சங்கத்திற்கு 2015 ஆம் ஆண்டின் போது காசாக ரூபா 4,294,901 வழங்கப்பட்டு, அதனை முதல் சிகிச்சைச் சேவைக்கான செலவினமாகக் குறித்துக் கொள்ளாது, பிரசாரச் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டுத் தவறின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான நிதியேற்பாடு ரூபா 285,596 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) இறுதிக் கையிருப்பில் உள்ளடக்கப்பட்ட பிரசுரங்களது கையிருப்பாகிய ரூபா 141,380 மற்றும் கட்டிடப்பொருள் கையிருப்பாகிய ரூபா 1,777,694 மற்றும் நுகர் பொருட் கையிருப்பாகிய ரூபா 141,402 என்பன குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது படலீய மாதிரிப் பாடசாலையால் வழங்கப்பட்ட ரூபா 9,364,296 பெறுமதியான நன்கொடையானது கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

(உ) பொலநறுவை மரபு நகரின் நுழை வாயிலை நிர்மாணிப்பதற்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கொடுப்பனவு செய்த ரூபா 25,950,998 நடைபெறும் வேலையாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக ஆண்டிற்கான வருமானத்திற்கு எதிரே பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ஊழியர் கடன் வரவு மீதியைச் செலவு மீதியில் ஈடுசெய்தமையால் இடர்க் கடன் ரூபா 82,986, மோட்டார் சைக்கிள் கடன் ரூபா 96,090 என குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(எ) கட்டிட நிர்மாண வேலைகளுக்கு மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,423,226 இடைக் காலக் கொடுப்பனவு நடைபெறும் வேலையாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டதால் கட்டிடங்களது பெறுமதி அதேயளவு அதிகரித்தும் நடைபெறும் வேலை அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. அதற்கமைய, கட்டிடத் தேய்மானம் ரூபா 71,161 அதிகரித்துக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இரு முதலீடுகளது வட்டி கணக்கிலிடப்படாமையால் வட்டி வருமானமும் பெற வேண்டிய வட்டியும் ரூபா 1,678,504 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) மாதிரி விற்பனைப் பிரிவினது வருமானப் பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் ஆண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 8,850,461 ஆகும். எனினும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றினது 11 ஆம் குறிப்பின் பிரகாரம் அவ்வருமானம் ரூபா 7,127,634 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 1,722,827 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 போதிய அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் கலாசார விவகார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வ ரீதியாக மத்திய கலாசார நிதியத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்ற வேண்டும். நிதியமானது செயலாளரின் சேவைகளுக்கென மாதாந்தச் சமபளத்தின் $33^1/_3$ பங்கை மாதாந்தப் படியாக 2015 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை ரூபா 140,791, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின்போது ரூபா 241,356 வீதப்படியும் கொடுப்பனவு செய்திருந்ததுடன், அதன் பொருட்டுத் தாபன விதிக் கோவையின் IX அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் தாபனப் பணிப்பாளரின் முன் கூட்டிய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியத்தைத் தாபிப்பதற்கான அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையினது அங்கீகாரமின்றி எப்பணியும் ஆரம்பிக்கப்படலாகாது. எனினும், 2014, 2015 ஆம் ஆண்டுகளில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி கொள்வனவுத் திட்டத்திலோ அல்லது செயல் நடவடிக்கைத் திட்டத்திலோ அல்லது வரவு, செலவுத் திட்டத்திலோ உள்ளடக்கப்படாத ரூபா 562,471,775 பெறுமதியான நிர்மாண வேலைகள் நடைபெற்றிருந்தன.

(இ) 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் 4(ஈ) பிரிவுக்கு முரணாக வரவு, செலவுத் திட்டத்திற்கப்பால் 2015 ஆம் ஆண்டின்போது படலீய மாதிரிப் பாடசாலையினூடாக ரூபா 4,449,852 பெறுமதியான மாதிரிகள் பல்வேறு பாடசாலைகள், பல்வேறு பன்சல, பல்வேறு அரச நிறுவனங்களுக்கென பணிப்பாளர் சபையினது அங்கீகாரமின்றி இலவச நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன.

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவை நீங்கிய 35 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய இடர்க் கடனாகிய ரூபா 1,670,016, ஐந்து ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வீட்டுக் கடனாகிய ரூபா 841,288, 5 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மோட்டார் சைக்கிள் கடனாகிய ரூபா 336,369 என்பன 1 ஆண்டுக்கும் 5 ஆண்டுகளுக்குமிடையேயான காலப்பகுதியின்போது அறவிடப்படவில்லை. மேலும், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட விழா முற்பணமாகிய ரூபா 1,151,000 விசேட முற்பணமாகிய ரூபா 91,400 என்பனவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அக்கடன் மீதிகளைப் பிணையாளிகளிடமிருந்தேனும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நானாவித கடன்பட்டோர் மீதியினுள் கலாசார விவகார அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 4 ஆண்டுகளுக்குக் கூடுதலாக அறவிடப்படாதிருக்கும் ரூபா 672,577 உள்ளடங்கியிருந்தது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| **(அ) 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டம்** | |
| (i) 3(2)(ஐ) பிரிவு | கலாசார விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 7 ஆம் பிரிவு | கலாசார விடயங்களுக்குப் பொறுப்பாக அமைச்சின் செயலாளர் நிறுவனத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக அமைய வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் கல்வி அமைச்சின் செயலாளர் பிரதான நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றியிருந்தார். |
| (ஆ) 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத் தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 43(அ) 1 மற்றும் 40(ஆ) பிரிவுகள் | இப் பிரிவுகளுக்கு முரணாக தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி ரூபா 812,471,775 பெறுமதியான 17 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

(i) நிதிப் பிரமாணங்கள் 104 மற்றும் 105

தம்புள்ள பிரசுரக் களஞ்சியத்தில் ரூபா 499,368 பெறுமதியான பிரசுரக் கையிருப்பு குறைவாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு 5 ஆண்டுகள் கடந்திருந்த போதும், அது தொடர்பாகப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 380(1)

திறைசேரியின் அங்கீகாரமின்றி 25 நடைமுறைக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை

(i) 4.3.1 மற்றும் 4.3.2

ஊழியர் காப்புறுதியைப் பெறுவதற்குக் கூறு விலைகளைக் கோருவதற்கு முன்னர் செலவினம் தொடர்பாக மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரித்து அதற்கான அங்கீகாரத்தைப் பெறாது ரூபா 9,905,284 பெறுமதியான காப்புறுதி பெறப்பட்டிருந்தது.

(ii) 5.3.5 ஆம் பந்தி

ரூபா 46.4 மில்லியன் பெறுமதியான படலீய மாதிரிப் பாடசாலையின் நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் சீ 5 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், அதற்கும் குறைவான தரத்திலான ஒப்பந்தகாரருக்கு அது வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 4.2.2 ஆம் பிரிவுகள்

மாதத்திற்கு ஒரு தடவை பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின்போது ஒரு பணிப்பாளர் சபைக் கட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறுகள் ரூபா 867,115,251 மிகையாகியதுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா ரூபா 479,462,969 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 387,652,282 அதாவது 80.8 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரவேச் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 550,917,864 அதிகரித்தமை, முதலீட்டு வருமானம் ரூபா 18,523,725 அதிகரித்தமை, விற்பனை மேம்பாடும் பொதுசனத் தொடர்புச் செலவினமும் ரூபா 52,947,362 குறைந்தமை, ஏனைய செலவினம் ரூபா 127,454,242 குறைந்தமை என்பன மேற்படி அதிகரிப்பிற்கு மூல காரணங்களாகின.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளது நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டின் பின்னர் நிதியானது தொடர்ந்து மிகைக்குள்ளாகியிருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்து, 2011 ஆம் ஆண்டில் ரூபா 807,979,481 ஆகவிருந்த பங்களிப்பு கிரமமாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,966,952,196 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு.

- ❖ கலாசார திரிகோணத்திற்குள் அமைந்த கலாசார நினைவுச் சின்னங்களையும் ஏனைய பிரதேசங்களில் உள்ள கலாசார நினைவும் சின்னங்களையும் அபிவிருத்தி செய்தல்.
- ❖ ஜேதவன தாகபத் திட்டத்தினதும் ஏனைய திட்டங்களினதும் சகல செலவினங்களையும் தீர்த்து வைத்தல்.
- ❖ இலங்கைக்குள் அல்லது அதற்கு வெளியே மத சார்பான நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- ❖ மதங்களை எழுச்சியுறச் செய்வது அல்லது மதச்சார்புடைய இடங்களை நடாத்துதல்.
- ❖ கலாசார மற்றும் மதச்சார்புடைய துறைகளில் பணியாற்றியுள்ள நபர்களுக்கு வெகுமதி அளித்தல்.
- ❖ கலை நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல்.
- ❖ பொது மக்களுக்கு நலனளிக்கும் ஏனைய மதச்சார்பான அல்லது கலாசாரப் பணிகளுக்குப் நிதி வழங்குதல்

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 தொடக்கம் 2015 வரை இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளது எண்ணிக்கை மற்றும் நிதியம் விற்பளை செய்த சுற்றுலாப் பிரவேசச் சீட்டுக்கள் என்பவற்றுக்கு இடையேயான பகுப்பாய்வு பின்வருமாறு.

| ஆண்டு | இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை | நிதியம் விற்பனை செய்த பிரவேசச் சீட்டுக்களது எண்ணிக்கை | விற்பனை செய்யப்பட்ட பிரவேசச் சீட்டுக்களது எண்ணிக்கை, சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடப்பட்டு, சதவீதமாக | பிரவேசச் சீட்டு வருமானம் ரூபா |
|---|---|---|---|---|
| 2013 | 1,274,593 | 504,699 | 39 | 1,748,439,894 |
| 2014 | 1,527,153 | 627,136 | 41 | 2,200,143,813 |
| 2015 | 1,798,380 | 722,676 | 40 | 2,751,061,677 |

மேற்படி தகவல்களின் பிரகாரம், 2013,2014, 2015 ஆம் ஆண்டுகளின்போது இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடுகையில் நிதியம் விற்பனை செய்த பிரவேச் சீட்டுக்களது எண்ணிக்கையினது சதவீதம் முறையே 39,41,40 சதவீதமாகின. அதற்கமைய, பழமை வாய்ந்த கலாசார நினைவுச் சின்னங்களுடன் கூடிய இடங்களைப் பார்வையிடல் மற்றும் மதச்சார்புடைய நடவடிக்கை மேம்பாட்டின் பொருட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்தெடுப்பதற்கான விற்பனை மேம்பாட்டுப் பணிகளை அமுலாக்கி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் கவனஞ் செலுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஒட்டுமொத்த நிறுவனத்திற்குமான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்திராததுடன் அகழ்வு மற்றும் பாதுகாப்புச் செயற்திட்டத்திற்கென மாத்திரம் வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. அத்திட்டத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அகழ்வு மற்றும் பாதுகாப்பு செயல் முன்னேற்றம் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின்போது மதிப்பிடப்பட்ட பொருட்களது கிரயமாகிய ரூபா 234,999,062 மற்றும் நேரடித் தொழிலுக்கான கிரயமாகிய ரூபா 468,357,144 என்பனவற்றின் மூலம் 303 அகழ்வு மற்றும் பாதுகாப்பு வேலைகளை முடிவுறச் செய்வதற்குத் திட்டமிட்டிருந்தபோதும், 53 வேலைக் களங்கள் மாத்திரமே வேலைகளை முடிவுக்குக் கொண்டுவந்திருந்தன. எனினும், மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட பொருட் கிரயத்தின் 24 சதவீதம் மற்றும் மதிப்பிடப்பட்ட நேரடித் தொழில் கிரயத்தின் 95 சதவீதம் என்பன உள்ளவாறு செலவழிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, ஒட்டுமொத்த செயலாற்றல் தொழிலின் பொருட்டு அதி கூடிய பங்களிப்பு வழங்கப்பட்டிருந்த போதும், எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை.

(ii) மீளாய்வாண்டின்போது 303 வேலைக் களங்களில் வேலைகள் முடிவடைவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் போது முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 28 வேலைக் களங்களது மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 40,452,278 உடைய அகழ்வு மற்றும் பாதுகாப்பு வேலைக்களங்களது வேலைகள் ஆரம்பமாகியிருக்கவில்லை.

(iii) பன்னிரண்டு செயற்திட்டங்களின் கீழ் உள்ள 20 அகழ்வு பாதுகாப்பு வேலைக்களங்களில் 20,331 வேலைக் கூறுகளை மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டு அதன் பொருட்டு ரூபா 72,711,768 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு முடிவு வரை இதில் 1,896 வேலைக் கூறுகள் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டு அதற்கென ரூபா 7,447,154 செலவிடப்பட்டிருந்தமை காரணமாக பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் முறையே 9 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என அதி குறைந்த மட்டத்திலிருந்தன.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரசுரக் கையிருப்புத் தேவைகளை முறையாக மதிப்பாய்வு செய்யாது பிரசுரிப்பாளர்களிடமிருந்து புத்தகங்களைக் கொள்வனவு செய்தமையால், நிதிக் கூற்றுக்களில் இறுதிக் கையிருப்பாகவிருந்த ரூபா 10,438,073 பெறுமதியான பிரசுரங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக விற்பனையில்லாது இருந்ததுடன் அவற்றை அப்புறப்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ இது வரை நடவடிக்கை எடுக்கப்படாதுமிருந்தது.

(ஆ) நிர்மாண வேலைகளுக்கான ஆலோசனைகளை வழங்குகையில் கட்டிடக் கலை ஆலோசகரின் வியூகத்திற்கமையத் திட்டமிடல், பொருட்களது விலைப் பட்டியலைத் தயாரித்தல், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது அங்கத்தவர் ஒருவராகப் பணியாற்றுதல், கொடுப்பனவைப் பரிசீலித்தல், வேலை மேற்பார்வை மற்றும் பாதுகாப்புப் பணிப்பாளராகப் பணியாற்றுதல் ஆகிய சகல வேலைகளும் நடைபெற்றிருந்ததுடன், அதற்கமைய சிறந்த வேலைப் பகிர்வு நடைமுறையை அறிமுகஞ்செய்து அதனை அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(இ) நிதியத்தின் ஆய்வுகூட மற்றும் பிரசுரப் பிரிவின் தீர்த்து வைக்கப்படாத முற்பணத்தில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இனங்காணப்படாத ஆரம்ப மீதியாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 770,700 மீதியை 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) படலீய மாதிரிப் பாடசாலையின் மீளாய்வாண்டினது ஒட்டு மொத்தச் செலவினம் ரூபா 34,830,911 ஆகும். மொத்த வருமானம் ரூபா 8,850,461 ஆகும். நட்டம் ரூபா 25,980,450 ஆகும்.

(ஆ) பிரவேசச் சீட்டு விற்பனைக் கூடங்களில் வெளிநாட்டுப் பிரவேசச் சீட்டுப் பெறுமதியை உள்ளூர் நாணயத்திற்கு மாற்றஞ் செய்வது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரவேசச் சீட்டுக்களை விற்பனை செய்யும் சந்தர்ப்பங்களில் பற்றுச்சீட்டுக்களை வழங்காமை.

(ii) அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அந்நியச் செலாவணிக் கணக்கொன்றைப் பேணுவதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராததுடன், சேகரிக்கப்படும் அந்நியச் செலாவணி நாளாந்தம் சாதாரணக் கணக்கில் வைப்பிலிடப்படுவதால் அந்நியச் செலாவணி இழப்பு ஏற்படுதல்.

(iii) பிரவேசச் சீட்டு ஒன்றினது அந்நியச் செலாவணிப் பெறுமதியை உள்ளூர் நாணயத்திற்கு மாற்றஞ் செய்கையில் முறையான நடைமுறைகளைப் பின்பற்றாமை, அதாவது அந்நியச் செலாவணி மாற்ற விகிதம் தொடர்பாக பணிப்புரையைத் தலைமை அலுவலகம் வழங்கும்போது அதனைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யாது பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின்போது அவ்வாறாக 02 பணிப்புரைகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தமை.

(iv) தலைமை அலுவலகம் 2015 ஆம் ஆண்டின்போது வழங்கிய பணிப்புரைகளுக்கேற்ப அந்நியச் செலாவணி விற்பனை விகிதத்தின் அடிப்படையில் நிதியம் கணக்கிலிட்டிருந்த வெளிநாட்டுப் பிரவேசச் சீட்டு விற்பனைப் பெறுமதி மற்றும் மாதாந்த அந்நியச் செலாவணி விற்பனை விகிதத்தின் அடிப்படையில் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு என்பவற்றுக்கிடையே ரூபா 25,455,799 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(v) அந்நியச் செலாவணி விற்பனை விகிதத்தின் அடிப்படையில் நாளாந்தம் பிரவேசச் சீட்டுக்களது அந்நியச் செலாவணிப் பெறுமதியை உள்ளூர் நாணயத்திற்கு மாற்றுஞ் செய்வதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை.

**4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஊழியர் காப்புறுதியைப் பெறுதல்**

---

(i) நிதியமானது 936 ஊழியர்களுக்குக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கென ரூபா 9,905,284 (வரியுடன்) செலவழித்திருந்ததுடன், காப்புறுதியைப் பெற விரும்பாத 432 ஊழியர்களுக்கு வழங்கிய ரூபா 4,571,670 அதில் உள்ளடங்கியுமிருந்தது. மேலும், ஆபத்தை எதிர்நோக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களைக் காப்புறுதி செய்யும் நோக்கில் இக் காப்புறுதித் திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தபோதும், அவர்களுள் சிலர் மாத்திரமே காப்புறுதியைப் பெறுவதில் பங்களிப்புச் செய்திருந்தனர்.

(ii) 2008 செப்டம்பர் 18 ஆந் திகதிய PF/437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களது காப்புறுதியானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து மாத்திரமே பெறப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருக்க, அதற்கு முரணாக, குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்திருந்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் புறக்கணித்து தனியார் காப்புறுதிக் கம்பனி ஒன்றிற்கு ரூபா 9,905,284 கொடுப்பனவுடன் ஊழியர்களது மருத்துவக் காப்புறுதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் காப்புறுதியைப் பெறுமாறு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு சமர்ப்பித்த சிபார்சு தொடர்பாக இச்சந்தர்ப்பத்தில் முகாமைத்துவம் எதுவித கவனமும் மேற்கொள்ளவில்லை.

(iii) காப்புறுதிக் கம்பனிக்குத் தவறான பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பித்து 50 ஊழியர்களது பெயர்களை அதிகமாக உட்புகுத்தி அதன் பொருட்டு ரூபா 475,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்திருந்ததுடன், அத்தொகையைக் குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுமில்லை.

(iv) 2015 ஏப்ரல் 01 தொடக்கம் 2015 ஒக்டோபர் 31 வரை ஊழியர்களது சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய மாதாந்தக் காப்புறுதித் தவணைப் பணம் ரூபா 1,118,376 ஆகும். எவ்வாறாயினும், ரூபா 299,882 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) சர்வதேச மகளிர் தினத்தின் நிமித்தம் 2015 மார்ச் 28 ஆந் திகதியன்று கலாசார மற்றும் கலை விவகாரப் பொது அமைச்சர் மற்றும் மாகாணத்தின் அரசியல் துறை அதிகாரி ஆகியோரின் பங்குபற்றலுடன் கலாசார மற்றும் கலை விவகார பொது அமைச்சினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு மாகாணத்தின் ஆயிரம் கர்ப்பிணிகளுக்கு சீத்தைத் துணி மற்றும் சிறிய நுளம்பு வலைகள் என்பவற்றை வழங்குவதற்கு நிதியத்தின் நோக்கங்களுக்குப் புறம்பாக ரூபா 722,500 செலவழிக்கப்பட்டிருந்தது.

## 4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுமான சொத்துக்கள்

பயன்படுத்தப்படாதிருக்கும் நிறுவனத்தின் 08 வாகனங்கள் சம்பந்தமாக 2015 ஒக்டோபர் 06 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலும் கொழும்பு கறுவாக்காட்டில் அமைந்துள்ள அத்தபத்து அலுவலகத்திலும் அவை பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 4.6 அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 முதல் 2014 வரை திஸ்ஸமஹாராம மற்றும் அபயகிரி செயற்திட்டங்களுக்குச் சொந்தமான 664 GI குழாய்கள், 1308 கப்ளிங், 19GI தகடுகள் என்பன பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கும் பல்வேறு அரச நிறவனங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. அவற்றை இதுவரை திருப்பிப் பெறவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள் வரிசை அமைச்சிற்கோ அல்லது வெளி நிறுவனங்களுக்கோ வழங்கப்படலாகாது. எனினும், அதற்கு முரணாக நிறுவன ஊழியர்கள் மூவர் உள்ளக நடவடிக்கைகள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார நடவடிக்கைகள் அமைச்சில் பணிபுரிவதற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின்போது அவ்வூழியர்களுக்குச் சம்பளமும் படியுமாக ரூபா 1,834,645 வழங்கப்பட்டிருந்ததுடன், முன்னாள் அமைச்சருக்கு 2012 யூலை தொடக்கம் 2015 ஆகஸ்ட் வரை டபள் கெப் வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

மத்திய கலாசார நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினரது எண்ணிக்கை என்பவற்றைக் கருத்திற்கொள்ளுமிடத்து சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை வெற்றிட எண்ணிக்கைகள் முறையே 2, 8, 50 என்பனவாகும். ஆரம்ப மட்டப் பதவியணியினர் எண்ணிக்கையில் 1010 ஊழியர்கள் அதிகமாகவிருந்தனர். மேலும், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தொல்பொருள் மற்றும் வாஸ்து வித்தியா ஆலோசகர் பதவிகளுக்கு 05 பேர் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர்.

## 4.8 பொருட் கொள்வனவு ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) படலீய மாதிரிப் பாடசாலையினது நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான கேள்வி ரூபா 46.4 மில்லியனில் தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) சகல தகைமைகளையும் கொண்டிருந்த அதி குறைந்த கேள்வி புறக்கணிக்கப்பட்டு, அதி கூடிய கூறு விலைக்குக் கேள்வி வழங்கப்பட்டதால் நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 3,036,382 ஆகும்.

(ii) கணக்காய்வுத் தினமான 2016 ஏப்ரல் 25 ஆந் திகதியளவில் உடன்படிக்கைக் கால வரம்பை மீறி 12 மாதங்களாகியும் அத்திவாரம் மாத்திரமே இடப்பட்டிருந்தது.

(ஆ) மதியுரையாளரைத் தெரிவு செய்து பணியிலமர்த்துவது தொடர்பான வழிகாட்டிக் கைநூலின் (2007 ஆகஸ்ட்) 3.6 மற்றும் 5.1.1 பிரிவுகளுக்கு முரணாக வாஸ்து வித்தியா மதியுரையாளர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் பணியிலமர்த்தி 2013 யூலை 01 முதல் 2016 மார்ச் 31 வரை ரூபா 33,748,306 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், 2014 யூலை 01 முதல் 2016 மார்ச் 31 வரை கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் ஆளுநர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மதியுரையாளரைத் தெரிவு செய்து பணியிலமர்த்துவது தொடர்பான வழிகாட்டிக் கைநூலின் (2007 ஆகஸ்ட்) 3.6 மற்றும் 5.1.1 பிரிவுகளுக்கு முரணாக படலீய மாதிரிப் பாடசாலையின் நிர்வாகக் கட்டிட நிர்மாண வேலை தொடர்பாக கலாசார மற்றும் நிர்மாண வேலைக் கம்பனிக்கு மதியுரைச் சேவைக் கட்டணமாக ரூபா 2,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக்கம்பனி நிர்மாண வேலை தொடர்பாகத் திட்டம், பொருட்களின் அளவுகளைக் குறிக்கும் பத்திரம், வியூகத் திட்டம் எதனையுமே சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஈ) றுவன்வெலிசாயாவின் புதிய பாதை நிர்மாண வேலை தொடர்பான நேரடிப் பரிசோதனையின்போது அளவைகளின்றியும் விலைப் பகுப்பாய்வின்றியும் பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **வேலை விடயம்** | **கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை** | **கொடுப்பனவு செய்த தொகை** | **கூடுதலாக வழங்கிய தொகை** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 05 கழிவுநீர் வடிகால்களையும் மதகுகளையும் தயாரித்தல் | 188,055 | 2,500,000 | 2,311,945 |
| 08 Drop Inlet களை அமைத்தல் | 400,000 | 400,000 | - |
| 03 அடி நீளமான ஹியூம் குழாய்களையும் 0.450 x 0.100 mm அளவிலான கொங்கிரீட் குழியையும் அமைத்தல் | 26,945 | 400,000 | 373,055 |
| மொத்தம் | | | 2,685.000 |

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமாயினும், 174 நாட்கள் தாமதித்து 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதியன்று அது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டையும் உள்ளடக்கியவாறு 2013 – 2016 காலப்பகுதிக்கான உபாய வழித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அது காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான அகழ்வு மற்றும் பாதுகாப்புச் செயற்திட்டங்களுக்கு வேலைத் திட்டம் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்ததுடன், செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பொருட் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டம் ஆளுநர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தல்

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2017 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டம் அவ்வாண்டு நவெம்பரில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான ஆளுநர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 5.7 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலநறுவை புனித நகரில் உட்புகு வீதியில் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு கொங்கிரீட் கற்களைப் பரவி அபிவிருத்தி செய்யும் பணிக்கென ஒப்பந்தக் கம்பனி ஒன்றிற்கு ரூபா 28,255,312 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது 2012 ஆம் ஆண்டறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பின்வரும் குறைபாடுகள் சம்பந்தமாக இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(i) நியமத்திற்கு ஒவ்வாத கொங்கிரீட் கற்கள் நிர்மாண வேலைக்குப் பயன்படுத்தப்பட்டு அதன் பொருட்டு ரூபா 22,099,917 கொடுப்பனவு செய்யப்பட்டமை.

(ii) பொருட்களது அளவைப் பட்டியலின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிராத வேலைகளுக்கும் ரூபா 4,660,998 கொடுப்பனவு செய்யப்பட்டமை.

(iii) A, B, C ஸ்டர் 40 சதவீதமும் கற்றூள் கலவை 50 சதவீதமும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை.

(iv) வீதி செப்பனாக அமையாமை

(அ) பொலநறுவை புனித நகரின் வெளிச் செல்லும் கதவு தொடக்கம் உட்புகு விதியில் 1 கிலோ மீட்டர் துாரத்திற்கு கொங்கிரீட் கற்கைளப் பரவிச் செப்பனிடும் பணி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 27,500,000 க்கு ஒப்படைக்கப்பட்டு, அது தொடர்பாக ரூபா 29,235,510 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாகப் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பொருட் கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவினதும் சிபார்சைப் பெறாமை.

(ii) அங்கீகாரமின்றி பாதையின் அகலத்தை அதிகரித்தமை.

(iii) நியமத்திற்கு ஒவ்வாது செயலாற்றியதால் மதிப்பீட்டுத் தொகை ரூபா 48,575,893 வரை அதிகரித்தமை.

(iv) நியமத்திற்கு ஒவ்வாத கொங்கிரீட் கற்களைப் பயன்படுத்தி நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டமை மற்றும் அதற்கென ரூபா 11,992,542 கொடுப்பனவு செய்யப்பட்டமை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தினது கவனவத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) அரசாங்க மானியம் கணக்கீட்டு நியமங்களுக்கேற்பக் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) அந்நியச் செலாவணியை உள்ளூர் நாணயத்திற்கு மாற்றஞ் செய்கையில் சரியான விகிதம் பயன்படுத்தப்படாமை. |
| | (iii) தொடர்புடைய நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை. |
| | (iv) உற்பத்திக் கணக்கைத் தயாரித்து சரியான உற்பத்திக் கிரயத்தை இனங் காணாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதவியணி நிர்வாகம் | (i) | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் நெடுங்காலமாகக் சில பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் பணியிலமர்த்தப்பட்டமை. |
| | | (ii) | ஊழியர்களது தேவையைக் கருத்திற் கொள்ளாது ஊழியர் காப்புறுதி பெறப்பட்டமை. |
| (இ) | பொருட்கொள்வனவு | (i) | பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படாமை. |
| | | (ii) | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாகப் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை. |
| | | (iii) | நிர்மாண வேலைகள் குறித்த கால எல்லைக்குள் நிறைவு பெறாமை. |
| (ஈ) | நிதிய முகாமைத்துவம் | (i) | அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கு அந்நிய செலாவணிக் கணக்கு ஒன்றைப் பேணாமை. |
| | | (ii) | குறுகிய கால முதலீடுகளில் நிதியை முதலீடு செய்தமை. |
| (உ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) | நெடுங்காலக் கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | சந்தேகத்துக்குரிய கடன்களுக்கான நிதியேற்பாட்டுக் கொள்கையை இனங்கண்டு அதற்கிணங்க நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமை. |
| (ஊ) | கையிருப்புக் கட்டுப்பாடு | (i) | குறித்த தினத்தில் கையிருப்பு கணிக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை. |
| | | (ii) | பிரவேசச் சீட்டுக் கையிருப்பை நிதிக் கூற்றுக்களில் தெளிவுறக் காட்டாமை |
| (எ) | சொத்து முகாமைத்துவம் | | சொத்துக்கள், பொறித் தொகுதி உபகரணங்கள் தொடர்பாக சொத்துக்களை இனங்காணும் குறியீட்டு எண், சொத்துக்குரிய இடங்கள் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துப் பதிவேட்டை முறையாகப் பேணாமை. |